<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS</u>** <u>75/2018</u>

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 15.10.2025

Pw1 (**சௌந்தர்ராஜ்** )

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1 ம் வாதி எனது தாயார். 1 ம் பிரதிவாதி என் தாயாரின் சகோதரி. வழக்கு விவரங்கள் என் தாயார் தகவல் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் வழக்கறிஞருக்கு என் தாயர் வழக்கு தாக்கல் செய்தபோது தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு திருமணம் ஆகி சுமார் 7-8 ஆண்டுகள் கழித்து 1 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆனது என்று என் தாயார் சொல்லி தெரியும். என் தயாரின் தந்தை பெயர் நல்லாகவுண்டர். என் தாயர் மற்றும் 1 ம் பிரதிவாதி நீங்கலாக நல்லாகவுண்டருக்கு ஆண் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு திருமணத்தின்போது நல்லா கவுண்டர் என்ன செய்தார் என்ற விவரத்தை என் தாயார் மூலம் நான் தெரிந்து கொண்டேன். என் தாயாரின் திருமணத்தின்போது என் தாத்தா செல்வ செழிப்புடன் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் சாதாரண விவசாய குடும்பத்தை போன்று தான் இருந்தார். என் தாயாரின் திருமணத்தின் போது என் தாத்தா நல்லா கவுண்டர் நல்ல வசதியுடன் இருந்ததால் சீர் சிறப்புகள் செய்தார் என்றும் 1 ம் பிரதிவாதிக்கு சீர் சிறப்புகள் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரம் நான்கு இனங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் உள்ள சொத்துக்கள் நீங்கலாக வேறு சொத்துகள் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரிதான். 1 ம்அயிட்ட சொத்து ராமன் காடு என்று சொல்வார்கள். அது மானாவாரி நிலம் என்றால் சரிதான். அதில் வீடு எதுவும் இல்லை. 2 ம் இன சொத்து பொத்திய தோட்டம் என்று சொல்வார்கள். அதில் கிணறு பம்புசெட் உள்ளது. அது பாசன பூமி என்றால் சரிதான். அந்த பூமியில் 1 ம் பிரதிவாதி வெள்ளாமை செய்து வருகிறார் என்றால் சரி. 2 ம்இன சொத்து 90 சென்ட் என்றால் அதை விட அதிகமாக இருக்கலாம். நல்லா கவுண்டர் 12.12.1995 ல் இறந்து விட்டார். அவர் இறக்கும் வரை நல்ல உடல்நிலை மற்றும் மனநிலையில் இருந்தார் என்றால் சரிதான். முதுமை இருந்தது. அவருக்கு எழுத படிக்கத்

தெரியாது என்றால் சரிதான். அவர் கைரேகை தான் வைப்பார். நல்லா கவுண்டர் உயிருடன் இருந்த காலத்தில் 21.05.1995 ல் 1 ம் பிரதிவாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சுள்ளிபாளையம் எங்கள் ஊருக்கு அருகில் உள்ளது. சுள்ளிபாளையத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் நடராஜன் என்பவரை நான் கேள்விபட்டுள்ளேன். ஆனால் நேரடியாக பார்த்ததில்லை. மேற்படி உயில் ஆவணத்தில் நல்லா கவுண்டர் தான் சுயமாக சம்பாதித்த சொத்தை பொறுத்து மட்டும் தான் அந்த உயில் ஆவணத்தை 1 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 இன சொத்துக்கள் நல்லா கவுண்டர் 1 ம் பிரதிவாதிக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்தி விட்டதால் அந்த சொத்தை பொறுத்து நான் பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதால் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1 ம் பிரதிவாதி தான் நாளது தேதி வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவாவில் கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடயதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.15 18:03:14 -0300

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS